முருகப்பெருமான் துணை

முருகப்பெருமான் தலைமையில் உலகம் அனைத்தும் ஞானியர்களின் ஆட்சிக்கு உட்படும்.

இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக மனமுவந்து கைப்பட எழுதிய அருள்வாக்கு

இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 713**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

**11.09.2021**, சனிக்கிழமை

1. தர்மத்தின் காவலனே ஞானதேசிகா
தரணிகாக்க வந்தநல் ஆறுமுக அரங்கா
பெருமைதரும் ஞான யுகம் படைக்க
பேரிடரையும் வெல்ல எந்தன் அவதாரமாக வந்த குருராஜா
2. அரசனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
வரமென என் சக்தியாய் வையகத்தை காக்க
வல்லமைபட மாதர்மம் துவக்கி அருளுகின்ற
3. அரங்கனே ஆறுமுக ஞானியே
அண்ணலே உன் தவபூர்த்தி இவைபிறவி தன்னில்
மண்ணுலகை காத்து ஞானயுகமாக்கி
மாதவசி உன்வழியே ஆறுமுகன் இந்த அற்புதத்தை நிகழ்த்துவேன்
4. நிகழ்த்தவே உன் வேண்டலும் உலகோர்வழி தூண்டலும்
நிலைத்தன்மை பெற்று கலியுக மாற்றம்
பிழையற ஞானயுகமாக மாறக்கூடும்
கந்தவேலன் துணைபட இந்த அற்புதம் நடக்கும்
5. நடக்கவே ஞானவான் நீ கரம் நீட்டும் மக்களெல்லாம்
ஞானவழி வந்து கலியுகத்தில் ஞானிகளாகி
வரம் பெற்று உன் வழி என் சக்தியாக
வாழும் ஞானிகளாக மாற்றம் பெறுவர்
6. மாற்றம் தரவே இந்த அற்புதத்தை
மாதவசி உன் வழி
கலியுகத்தில் ஆறுமுகன் யான்
நடத்திக் கொண்டிருக்கின்றேன்
7. இருக்கவே அரங்கனை தொடரும் எல்லா மக்களும்
இந்த பேருலகில் ஞானிகளாக மாறி
கருத்தாக உலக இடர்களை எல்லாம் போக்கி
கலியுக ஞானிகளாக ஆக்கம் பெறுவர் சடுதி உறுதி

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–